யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம்

பத்தாவது ஆண்டு நிறைவு வெளியீடு

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

1982 - 1992

# சைகை மொழி அகராதி - தொகுதி 1

# SIGN LANGUAGE DICTIONARY - Vol. I

1992.02.01

07.05.1992

# சைகை மொழி அகராதி

தொகுதி I

# SIGN LANGUAGE DICTIONARY

VOLUME I

யாழ். செவிப்புலனற்றோர் புனர் வாழ்வு நிலைய வெளியீடு
( Publication of Jaffna Rehabilitation Centre for the Deaf )

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

86604

வழிநடத்தல்:

க. கோபாலகிருஷ்ணன் பி. ஏ. பி. பில். (இங்.), எம். ஏ.
( துணை அதிபர், நவீல்ட் பாடசாலை, கைதடி. )
போஷகர்,
யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம்,
யாழ்ப்பாணம்.

Directed by:

**K. GOPALAKRISHNAN** B. A., B. Phil. (U. K.) M. A. (Cey.)
**Patron,**
Jaffna Rehabilitation Centre for the Deaf.

முதற்பதிப்பு 1992
பதிப்புரிமை
விலை ரூபா 100/-

விரல்களில் எழுத்து ஆங்கிலம் (Finger - Spelling English)

# THE DEAF AND DUMB: STANDARD MANUAL ALPHABET

The two-handed manual alphabet used for finger-spelling to the sighted deaf in Great Britain and the Commonwealth countries.







இருகை ஆங்கிலமுறை (Two Hands English System)

## உள்ளே....


| | | | |
|---|---|---|---|
| விரல்களில் எழுத்து | ... | ... | 4 |
| மகோன்னதமான பணி | ... | ... | 5 |
| நம்பிக்கை ஊட்டுவதாக அமையட்டும் | | ... | 6 |
| வெற்றிக்கு வித்தாகட்டும் | ... | ... | 7 |
| புனர் வாழ்வு வேண்டும் | ... | ... | 8 |
| உதவும் கரங்கள் | ... | ... | 9 |
| உழைக்க வேண்டுகிறேன் | ... | ... | 10 |
| நாம் வெற்றியடைவோம் | ... | | 11 |
| உங்கள் பணிகண்டு மகிழ்கின்றேன் | | ... | 12 |
| அறைகூவல் | ... | ... | 13 |
| முன்னுரை | ... | ... | 15 |
| உறுதி உரைகள் வேண்டாம்...... | | | 17 |
| நவீல்ட்...... | ... | ... | 18 |
| அன்பான வேண்டுகோள் | ... | ... | 19 |
| விளையாட்டுக் கழகம் | ... | ... | 20 |
| சைகை மொழி அகராதி | ... | ... | 21 |
| நேற்று — இன்று — நாளை | ... | ... | 27 |
| ஒலியில்லா அதிர்வுகள் | ... | ... | 28 |
| இவர்களும் மனிதர்கள் | ... | ... | 29 |
| சைகை மொழி கற்றல் | ... | ... | 31 |
| வாய்பேச முடியாத...... | ... | ... | 32 |
| செவிப்புலனிழந்தோர்...... | ... | ... | 33 |
| கிறிஸ்தவக் கழகம் | ... | ... | 34 |
| தொழிற்பேட்டை | ... | ... | 35 |



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
86604

விரல்களில் எழுத்து - ஆங்கிலம் ( Finger Spelling - English )




ஒரு கை - அமெரிக்க முறை ( One Hand System - America. )

# மகோன்னதமான பணி

யாழ். செவிப்புலனற்றோர் புனர் வாழ்வு நிலையம் தனது பத்தாண்டு நிறைவினை பூர்த்தி செய்கின்றது. எமது மண்ணில் எங்கள் மக்களுக்கு இதுபோன்ற பல அமைப்புக்கள் உபயோகமான பல சேவைகளை அளித்து வருகின்றன.

இவ்வாறான பொது நிறுவனங்களின் பங்களிப்பும், சேவைகளும் மேன்மேலும் புல்கிப்பெருக வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

பல்வேறு காரணங்களால் எமது சொந்தச் சகோதரர்கள், நண்பர்கள், குழந்தைகள் என்று இயற்கையின் செயற்பாடுகளால் சாதாரண மனிதர்களை விட சிறு குறைபாடு உடையவர்களாக அமைந்துவிடுகிறார்கள்;

அவர்களது நாளாந்தக் கடமைகளுக்கும். அவர்களது எதிர்கால நலன்களுக்கும் செயற்பாடுகளுக்குமாக நாம் அவசியமான சில ஒத்துழைப்புகளை, பயிற்சிகளைச் செய்து கொடுக்கவேண்டியுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளை செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் போன்ற நிறுவனங்களே முன்னுரிமை அளித்து செய்து வருகின்றன. அந்த வகையில் அவற்றின் பணி மகோன்னதமானது.

பத்தாண்டு நிறைவினையொட்டி வெளியிடப்படும் இம்மலரும், நிறைவினைக் குறித்து நடக்கும் சகல செயற்பாடுகளும் சிறப்பாக நடக்க எனது ஆசிகள்.

அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம்.
1-11-1991

கா. மாணிக்கவாசகர்
யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும்
மாவட்ட ஆணையாளரும்

# நம்பிக்கை ஊட்டுவதாக அமையட்டும்

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தைச் சார்ந்த நீங்கள் உங்கள் நிலையத்தினது 10வது ஆண்டு விழாவையொட்டி ஒரு மலரினை வெளியிட இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய காலம் தமிழினமே புனர்வாழ்வுக்கு உள்ளாகியுள்ள காலமாகும்.

இராணுவ அட்டூழியங்களினால் எமது இனமே பாதிப்படைந்துள்ளது.

இவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சிகளாக அமைந்து எமது இன மக்களை நிவாரணத்தில் தங்கி இருக்கும் நிலைக்கு வித்திட்டுச் செல்கின்றது.

இது ஒரு பரிதாபமான நிலை.

இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

உங்களது சங்கத்தின் புனர்வாழ்வு நிகழ்வுகள் இச்சங்க அங்கத்தவர்களுக்குத் தாமும் மற்றவர்கள்போல் சம உரிமையுடன் இம்மண்ணில் வாழ உரிமையுடையவர்கள் என்பதை உணர்த்துவதாகவும், எதிர்காலம் சுபீட்சமாக அமையும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டுவதாகவும் இருக்க வேண்டுமென விரும்புகின்றேன்.

உங்களது நிலையம் அங்கத்தவர்களின் உதவிக்கரமாக என்றும் அமைய என் ஆசிகளைத் தெரிவித்துகொள்கிறேன்.

சுந்தரம் டிவகலாலா,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
பணிமனை.
யாழ்ப்பாணம்.
18-11-991.

# வெற்றிக்கு வித்தாகட்டும்

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் முகமாகக் வெளியீடு செய்யவிருக்கும் விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அழவற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூக, பொருளாதார, அபிவிருத்தி தொடர்பாக இப் புனர்வாழ்வு நிலையம் ஆற்றிவரும் சேவை கண்டு நான் அளப்பரிய ஆனந்தமடைகின்றேன்.

இப்புனர்வாழ்வு நிலையத்தின் செயற்பாடுகள், தங்கள் மத்தியிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக மனந்தளர்ந்து போகாத தன்மையுடையனவாய், எதையும் தாங்கும் இதயங் கொண்டனவாய், எதனையும் எம்மால் சாதிக்க முடியும் என்ற எண்ணங்கொண்டனவாய், பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை செல்லும் தகுதியும் எமக்கு உண்டென்று தெரிவிப்பனவாய் அமைந்துள்ளமை கண்டு சந்தோஷமடைகின்றேன்.

தற்போதைய சூழ்நிலையில் காகிதங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு வேளையிலும் விழா மலர் வெளியிடுகின்ற இவர்களது முயற்சியினைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவர்களது சேவைகள், முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெற எனது இதயம் நிறைந்த நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம்.
18-11-1991

திருமதி K. சிவசிதம்பரம்
சமூகசேவைப் பிரதிப் பணிப்பாளர்

# புனர் வாழ்வு வேண்டும்

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் தனது 10 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வெளியிடும் மலருக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வலதுகுறைந்தோர் வலதுகுறைந்தோராகத் தொடர்ந்தும் தமது வாழ்நாளைக் கழிக்கவிடாது அவர்களும் எமது சமுதாயத்தில் ஓர் அங்கம் என்ற உணர்வு அனைவருக்கும் ஏற்படவேண்டி ஏற்படுத்தப்பட்ட புனர்வாழ்வு நிலையம் தனது பணியில் கணிசமான அளவு வெற்றிகண்டிருப்பது ஒரு சிறப்பபான அம்சமாகும்.

எம்மின மக்கள் பலர் வலதுகுறைந்தோராக ஆக்கப்படும் இக்காலச் சூழ்நிலையில் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து இச் சங்கம் தனது சேவையை தொடர்ந்தும் திறம்பட ஆற்றவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

மாநகராட்சி மன்றம்.
யாழ்ப்பாணம்.
13-11-1991

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# உதவும் கரங்கள்

யாழ். செவிப்புலனற்றோர் அனேகமாக தங்களுடைய கல்வியையும் பயிற்சியை யும் கைதடியிலுள்ள செவிப்புலனற்றோர் விழிப்புலனற்றோர் பாடசாலையில் ஆரம் பித்து அங்கேயே பூர்த்தியும் செய்கின்றார்கள்.

அங்கே அவர்களுக்குக் கல்வியுடன், புனர்வாழ்வுக்குத் தேவையான பயிற்சியும் வழிகாட்டலும் கொடுக்கப்படுகின்றது.

அங்குள்ள திறமையும் தகைமையும் வாய்ந்த பிரதி அதிபர் திரு. K. கோபால கிருஷ்ணனைப் போஷகராகக் கொண்ட யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம், யாழ். லயன்ஸ் கழகத்தின் செயற்திட்டங்களில் ஒன்றான "உதவும் கரங்கள் — செஷயர் இல்லம்" கட்டிடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

அத்துடன் இவர்களுடைய தொழிற்சாலைகள் வேறு பல இடங்களிலும் இலாப கரமாக நடைபெற்று வருகின்றன.

இவர்களுடைய செயற்பாடுகள் பிரதானமாக பனம் தெங்குப் பொருட்களை மூலதனமாகக் கொண்டுள்ளன.

இதனால் எம் உள்ளூர் வளங்கள் பிரயோசனப்படுவதுடன் இவர்கள் சுயமாக சம்பாதித்துத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கொடுக் கப்படுகின்றது.

இந்தப் புனர்வாழ்வு நிலையம் தனது பத்து வருட பூர்த்தியையிட்டு மலர் வெளியிட முன்வந்திருப்பது இக்கஷ்டமான காலத்திலும் இவர்களுடைய நேர்மை யான வாழ்வினையும் உற்சாகத்தினையும் பிரதிபலிக்கும் ஓர் அர்ப்பணிப்பாகக் கருதி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ். செவிப்புலனற்றோர் சங்கம் மேலும் விருத்தியடைந்து தங்களுக்கும் தாங்கள் சார்ந்துள்ள சமூகத்துக்கும் இன்னும் மேலான பயனை அளிக்கவேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவர்களை வாழ்த்துகிறேன்.

டாக்டர் வே. யோகநாதன்,
தலைவர்
யாழ். உதவும் கரங்கள் - செஷயர் இல்லம்,
முன்னாள் தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்.

யாழ்ப்பாணம்.
18-11-1991.

# உழைக்க வேண்டுகிறேன்

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் தனது நற்பணியின் பத்தாதாவது ஆண்டினை நிறைவு செய்வது அறிந்து மகிழ்ச்சி. செவிப்புலனற்றோர் பயனுள்ள முறையில் தொழில்களில் ஈடுபடுத்தலாம் என்ற உண்மை உணரப்படுவதற்கு முன்னரே - கால் நூற்றாண்டுகளுக்கு முன்னரே- எமது தொழிலகத்தில் செவிப்புலனற்றோருக்கு வேலை வழங்கி அவர்கள் ஏனைய தொழிலாளர்களிலும் பார்க்க எதுவிதத்திலும் திறமையிலேயோ அன்றி உற்பத்தித்திறனிலேயோ சளைத்தவர்கள் அல்ல என்பதைக் கண்டறிந்து நாம் இவர்களைப் பயனுள்ள தொழில்களில் அமர்த்த வேண்டும் என்ற ஆலோசனையை ஏனையோர்க்கு வழங்குவதில் பெருவிருப்பம் கொண்டுள்ளோம்.

இப் புனர்வாழ்வு நிலையம் எம்முடன் நெருங்கிய தொடர்பினை வளர்த்துக் கொண்டுள்ளதால் அவர்கள் பணியின் பாரிய அளவினையும் நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

யாழ், செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் தமது செயற்பாட்டினை விரிவாக்கி மேலும் பல வகைகளில் தமது உறுப்பினர் நலனுக்காகவும் மேம்பாட்டுக்கும் உழைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

க. கனகராசா, J. P.
உரிமையாளர்
மில்க்வைற் தொழிலகம்.

யாழ்ப்பாணம்.
7-10-1991

# நாம் வெற்றியடைவோம்

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் பத்து ஆண்டுகளை நிறைவு செய்து விழா எடுக்கும் இவ்வேளையில் ஆசியுரை தரும்படி கேட்டதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாழ்த்துரையின் மூலம் என்னையும் தங்கள் நிலையத்தோடு இணைப்பது குறித்தும் பெருமைப்படுகிறேன்.

கடந்த பத்து ஆண்டுகளும், குறிப்பாக யாழ். நகர மக்களுக்கு, மிகக் கடின மான சோதனைகள் நிறைந்த காலமாயிருந்திருக்கின்றன.

பசி பட்டினிகள் அனர்த்தம். குறைந்த வேலை, வேலை இல்லா வாய்ப்புகள் ஏராளம்.

குண்டு வெடிப்புகள் வான் தாக்குதல்கள் பெரும் தொகை. கடையடைப்பு களுக்கும் பொருளாதாரத் தடைகளுக்குமோ அளவேயில்லை. அனைத்து இக்கட்டுகள் இடையூறுகள் மத்தியிலும் ''நாம் மேற்கொள்வோம்'', ''நாம் வெற்றியடைவோம்'' என்ற உறுதியான பாணியிலே யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் கடந்த தசாப்தத்தை வாழ்ந்துள்ளது, வளர்த்துள்ளது.

இன்றும் இந்நிலையம் யாழ். மக்களுக்கு ஒரு முன்மாதிரியைத் தந்து வருகின் றது மாத்திரமல்ல, இப்போர்க்காலச் சூழலில் புலனிழந்தவர்கள், அங்கமிழந்தவர்கள் வாழ்விழந்தவர்கள் அல்ல என்பதும் உறுதியாகின்றது.

ஆதலால்,

வாழ்க யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம்.

வளர்க உங்கள் பணி.

சந்திரா விக்ரர் M. Phil.
அதிபர்
நவீல்ட் செவிப்புலனற்றோர்
விழிப்புலனற்றோர் பாடசாலை.

கைதடி.
18-11-1991.

# உங்கள் பணிகண்டு மகிழ்கின்றேன்

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின் பத்தாண்டு நிறைவை யொட்டி வெளியிடப்படும் இச் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்ப தில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தாபனம் செவிப்புலனிழந்தவர்களுக்கு ஆற்றிவரும் பணிகள் பாராட்டத் தக்கவை.

உறுப்பினர்களிடையே காணப்படும் பொறுப்புணர்வு, அயராத உழைப்பு, சகிப் புத்தன்மை மெச்சப்படவேண்டியவை.

இத் தாபனத்தின் கிளைகள் தமிழ் மண்ணெங்கும் தோற்றுவிக்கப்பட வேண்டியவை.

இவர்கள் பணி மேலும் வலுப்பெற இறைவன் ஆசிவேண்டி எனது வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**க. கோபாலகிருஷ்ணன்**
போஷகர்
யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம்
துணை அதிபர், நவீல்ட் பாடசாலை

யாழ்ப்பாணம்,
17-11-1991

## அறைகூவல்

நாம் கேட்கும் சக்தியை இழந்தவர்கள்.

நாம் அதனை மறைக்க முற்படவில்லை.

உங்களொவ்வருவரிடமும் நிச்சயம் பல குறைகளுண்டு.

அவற்றை நீங்கள் தெரியப்படுத்துவது இல்லை.

ஆண்டவன் ஒருவன்தான் சகலதும் நிறைந்தவனாக இருக்க முடியும்.

எங்கள் குறைகளிலும் நாங்கள் நிறைவு காண்கின்றோம்.

எங்கள் சூழலில் நடப்பனவற்றை கேள்வியுணர்வு மூலம் எம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. இந்நிலை ஓரளவு எமக்கு நிம்மதியளிப்பதாகவே நாங்கள் கருதுகிறோம்.

காந்தியடிகள் கூறியது போன்று வேண்டாதவற்றை கேட்காது நிம்மதியுடைகிறோம்.

ஆனால் உங்களிற் சிலர் நினைப்பது போன்று நாம் ஊமைகளல்ல.

எமது உடலில் எவ்வித குறைபாடுமில்லை. அயலவர் ஆக்கிரமிப்போ தலையீடோ, கவர்ச்சித் திருப்பமோ இன்றி எமது வேலைகளில் மன நிறைவுடன் ஈடுபடுகிறோம்.

எமது சட்புலன் சகல இழப்புக்களையும் ஈடு செய்கிறது உங்கள் உதட்டசைவுகளையும் முகபாவனைகளையும் நாம் இலகுவில் புரிந்து கொள்வோம்.

எமது கருத்துக்களை உதட்டை அசைப்பதன் மூலமோ எழுத்து மூலமோ உங்களுக்குத் தெரியப்படுத்தவும் எம்மாலியலும்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் பிரதேசங்களிலும் பல நிறுவனங்களில் எம்மவர் இன்று பணிபுரிந்து வருகின்றனர். எத்தொழிலதிபரேனும் இதுவரை எம் மீது எந்தக் குறைபாட்டையும் காணவில்லை.

எம்மில் பலர் கைதடி செவிப்புலனற்றோர் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறியவர்கள். அப்பாடசாலைக்கும் எம்மை இன்று சகல வழிகளிலும் வழி நடாத்திச் செல்லும் பாடசாலைத் துணை அதிபரும் எமது நிலையப் போஷகருமாகிய திரு. க. கோபாலகிருஷ்ணன் அவர்கட்கும், எம்மவர்க்குத் தொழில்களை வழங்கி வரும் தொழில் அதிபர்களுக்கும், எமக்குப் பேராதரவு காட்டிவரும் தமிழ் மக்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

சைகை மொழி அகராதியொன்றினை வெளியிட வேண்டுமெனப் பல காலம் நாம் முயற்சி செய்து வந்தோம். சைகை மொழியை அறிவதன் மூலம் செவிப்புலனற்றவர்களோடு சாதாரண தொடர்பு கொள்ள முடியும்.

எமது நிலையமே இவ்வகராதியை வெளியிடுகின்றது.

இது பல தொகுதிகளாக வெளிவர இருக்கின்றது.

இது முதற் தொகுதியாகும்.

இதை வெளியிடுவதற்கு உதவியாக இருந்த சகலருக்கும் விசேடமாக வழி நடத்துநர் திரு. க. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எமது நன்றிகள். இந்நூலினை சகலரும் பெற்று எமக்கு வேண்டிய ஊக்கத்தினை அளிப்பார்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்நிலையம் இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் செவிப்புலனிழந்தோரின் நன்மைகளைப் பேணிவருகின்றது. அவர்களுக்கான என்ன பிரச்சனையிருப்பினும் எவ்வேளையிலும் நாம் உதவுவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.

சமூகத்தோடு ஒன்றிணைந்து சமூகத்துள் சமூகமாக எமக்குரிய இடத்தை வென்றெடுப்பதே எமது நோக்கம். அந்நாள் வெகு தொலைவிலில்லை.

இந்நூலின் வெற்றிக்கு யாவரின் ஆசியையும் வேண்டி நிற்கிறேன்.

க. சண்முகநாதன்
தலைவர்

யாழ். செவிப்புலனிழந்தோர்
புனர்வாழ்வு நிலையம்,
426, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
30-12-1991.

# முன்னுரை

மனிதன் சமூக வாழ்வை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைவது மொழி. தனது எண்ணங்களைப் பிறருக்குத் தெரியப்படுத்த மனிதனால் வகுக்கப்பட்ட குறிகள் அல்லது அடையாளங்களைக் கொண்ட ஒரு தொகுப்பே மொழியாகும். ஒலி வடிவத்தையோ, வரி வடிவத்தையோ, கொண்ட மொழி தோன்றுவதற்கு முன் மனிதன் உடல் அசைவுகளைக் கொண்டே கருத்துப் பரிமாற்றிக் கொண்டான்.

இன்று வாய்ப்பேச்சு மூலம் கருத்துப்பரிமாற முடியாத கூறினராகிய செவிப் புலனற்றோர் கருத்துப் பரிமாறலுக்குதவும் சைகை மொழியாக இம்மொழி விருத்தியடைந்துள்ளது.

இது ஓர் சர்வதேச மொழியாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

" சைகைமொழி " கற்பதற்கு இலகுவான ஒரு மொழியாகும்.

எம்மை அறியாமலே இம்மொழியை நாளாந்தம் உபயோகிக்கின்றோம். உதாரணமாக ஒரு சமய ஆராதனை மண்டபத்தில் பெருந்திரளான மக்களைத் தனது கை அசைவால் ஒரு சமயத் தலைவர் ஆசீர்வதிக்கிறார். வணக்கம் சொல்லி வரவேற்பதற்குப் பதிலாகக் கை கூப்புகிறோம். எமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்குக் கைதட்டி ஆரவாரிக்கிறோம். எமது மறுப்பைத் தெரிவிப்பதற்குத் தலையை அசைக்கிறோம். நல்லது என்பதைக் கூறுவதற்குப் பெருவிரலை எடுத்துக் காட்டுகிறோம். இவையெல்லாம் சைகை மொழியே.

ஆனால் செவிப்புலனற்றோரால் பேசப்படும்போது நாம் வேறு கண்கொண்டு பார்க்கிறோம். எள்ளிநகையாடப்படுவதுமுண்டு.

சைகைமொழி உலக மொழியாக இருப்பினும் நாட்டுக்கு நாடு பிராந்தியத்திற்குப் பிராந்தியம் சில வேறுபாடுகளைக் கொண்டதாகவே இருக்கிறது. அது எவ்வாறு இருப்பினும் அடிப்படையில் பொதுவான ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

சர்வதேச சைகை மொழி அகராதி ஒன்றைத் தொகுப்பதற்கு சர்வதேச அரங்கில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில் தமிழ் பேசும் செவிப்புலனற்றோரதும் அவர்களோடு தொடர்பு கொள்ளவும் அவர்களின் மொழியைக் கற்க ஆர்வமாக உள்ளோரினதும் நலன் கருதி இச்சைகைமொழி அகராதியை எனது வழிகாட்டலின் கீழ் யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தினர் வெளியிட முன்வந்ததும் மிகவும் பாராட்டுதற்குரியது.

இவ்வகராதி பல தொகுப்புகளைக் கொண்டதாக அமையும்.

இப்பொழுது தொகுதி - 1 வெளிவருகின்றது.

இது நாளாந்தம் தேவைப்படும் அடிப்படைச் சைகைகளைக் கொண்டதாக அமைகின்றது. ஒவ்வொரு சைகைக்கும் எம்மாலானளவில் விளக்கங்கள் கொடுத்துள்ளோம். இது எமது முதல் வெளியீடாகையால் இதில் காணப்படும் குறைகள். ஏற்படுத்த வேண்டிய திருத்தங்கள் ஏதேனுமிருப்பின் தயங்காது தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

இத்தொகுப்பினை வெளியிட உதவிய அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம், இத்துறையில் ஆர்வம் கொண்ட அனைவரும் இந்நூலைப் பெற்று எமக்கு பேராதரவு நல்குவார்களென எதிர்பார்க்கிறோம்

யாழ். செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையம் இந்நாட்டின் தமிழ் பேசும் செவிப்புலனற்றோரின் நலனைப் பேணும் ஒரே நிறுவனமாக இயங்கி வருகின்றது. இதன் தலைமை அலுவலகம் 426, கே. கே. எஸ், வீதியிலுள்ள கில்னர் மண்டபத்தில் அமைந்துள்ளது.

கைதடி செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் துணை அதிபராகப் பணி புரியும் யான் செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தின் போஷகராகவும் செவிப்புலனற்றோர் நீதிமன்றமொழி பெயர்ப்பாளராகவும் (தமிழ்ப்பகுதி) கடந்த இருபதாண்டுகளாகக் கடமையாற்றி வருகின்றேன்.

இந்நாட்டில் வாழும் சகல தமிழ் பேசும் செவிப்புலனற்றோரது வாழ்விற்காகவும், விடுதலைக்காகவும், விடிவிற்காகவும் என்னாலான பணிகளையாற்ற எனக்கு வேண்டிய மனோவலிமையையும் உடல் வலிமையையும் அளித்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு சம்பந்தமாக என்னோடு தொடர்பு கொள்ள விரும்புவோர் பாடசாலை முகவரிக்கோ, நட்புறவு நிலைய முகவரிக்கோ தொடர்பு கொள்ளலாமெனக் கூறவிரும்புகிறேன்.

செவிப்புலனற்றவரும் எமது உடன் பிறவிகளே. எம்மிடம் எத்தனையோ குறைபாடுகளுண்டு. அவற்றைப் போன்றதே இப்புலன் குறைபாடும். அவர்களும் எமது சமுதாயத்தில் ஒன்றிணைக்கப்பட வேண்டியவர்கள்; சைகை மொழியறிவு இணைப்புப் பாலமாக அமைகிறது.

இவ்வகராதி சைகை மொழியைக் கற்க விரும்புவோர்க்கு ஓர் ஊன்றுகோலாக அமையும். இதன் வெற்றிக்கு யாவரினது ஆதரவையும் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

* கூடிய விரைவில் சைகை மொழிக் கருத்தரங்குகளை இந்நிலையத்தில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

க. கோபாலகிருஷ்ணன்

ஒக்ஸ்வாம் இல்லம்,
நவீல்ட் பாடசாலை,
கைதடி.

# உறுதி உரைகள் வேண்டாம்
# உதவி வேண்டும்

செவிப்புலன் இழந்தோருக்கு கல்வி புகட்டும் ஒரு நோக்கத்துடன் கைதடி நவீட் பாடசாலை 1956 இல் உருவாக்கப்பட்டது.

இப் பாடசாலையில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரை வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இங்கு பயின்று முடித்த மாணவர்கள் தத்தமக்கு பொருத்தமான வேலைகளைச் செய்கின்றனர். செவிப்புலன் இழந்தோர் தங்கள் மாணவர்களுடன் சுதந்திரமாக கதைப்பதற்கு அவர்களுக்கொன்றோர் தனியான இடமில்லை. கதைப்பவர்கள் தெருக்களிலும் சந்திகளிலும் கூட்டங்கூட்டமாக நின்று கதைப்பதைப் பார்த்து மற்றவர்கள் எள்ளி நகைக்கிறார்கள்.

1956 ம் ஆண்டிலிருந்து 1982 ம் ஆண்டுவரை இந்நிலை தொடர்ச்சியாக இருந்து வந்தது. இத்தனை காலமும் எங்களுக்கொன்றோர் பொழுது போக்கு வசதிகளை ஒருவரும் முன்வந்து செய்யவில்லை.

1982 ம் ஆண்டளவில் எங்களின் பரிதாப நிலையை உணர்ந்த சில உதவி வழங்கும் கரங்கள் முன் வந்தன. இவர்களின் உதவியுடன் யாழ் / செவிப்புலன் நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது.

எமது இந்தப் புனர்வாழ்வு நிலையத்தில் வருடாந்தம் செவிப்புலன் அற்றோர் ஆண்டு விழா கொண்டாடப்படுகின்றது. இவர்கள் தங்கள் துறைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக பல நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர். இந்த ஆண்டு விழாவிற்காக பல துறைகளில் உயர்பதவி வகிப்பவர்களையும் அழைக்கின்றார்கள்

நாங்கள் இந்த செவிப்புலன் அற்றோர் மாணவர்களுக்கு பல வசதிகளை ஏற்படுத்தி தருவதாகவும் ஒவ்வொருவரின் தகுதிகளுக்கேற்ப வேலை வாய்ப்புக்கள் வழங்குவதாகவும் தேவையான ஏனைய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் இவர்களையும் நாட்டில் உயர் இடத்தில் வைத்து மதிக்கத்தக்கதாகவும் வாக்குறுதி அளிக்கின்றனர்.

இதே போல் ஒவ்வொருவரிடமும் இப்படிச் சொல்லுபவர்கள் தாங்கள் சொன்னதில் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை. எங்கள் குடும்பத்தில் ஒன்றாக இருந்தும் இவர்கள் எங்களைப் பார்த்து எந்த வித உதவியையும் செய்யாமல் இருக்கும் போது வெளிநாட்டு நிறுவனங்களோ வேறு பல அமைப்புக்களோ எமக்கு எவ்வாறு உதவி செய்ய முன்வரும்.

தாங்களே ஒருவரையும் நம்பி இராது தங்கள் முயற்சியின் காரணமாகவே பலவற்றை ஆற்றுகின்றனர்.

செவிப்புலன் இழந்தோர் எல்லோரும் ஒரு குடும்பத்தை போன்றவர்கள்.

இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தங்களால் இயன்றவறை தாங்களே தீர்த்துக் கொள்கின்றனர். உதவி வழங்குவோம் என்று உறுதிஉரை கூறியவர்கள் எல்லோரும் கைவிரித்து நிற்கின்றனர்.

சே. செல்வகுமார்

# நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் 24-ம் ஆண்டு நிறைவு விழா

மேற்படி சங்கத்தின் 24வது ஆண்டு நிறைவு விழா சென்ற 16-6-1991 சனிக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்த பிரதிநிதிகள் மிகக் குறைவாக இருந்தபோதிலும் குடாநாட்டிலிருந்து பெருந்திரளான அங்கத்தினர் சமுகங் கொடுத்திருந்தனர்.

தலைவர் திரு. க. சண்முகநாதன் தனது தலைமை உரையில் சகல அங்கத்தவர்களையும் மகிழ்வுடன் வரவேற்றதோடு இந்த இருபது ஆண்டுகளும் வெற்றிகரமாகத் தமது குறிக்கோள்களை அடையும் பணியில் சங்கம் வெற்றிநடை போடுவதற்கு உறுதுணையாக இருந்த சங்கப் பேஷகர் திரு. க. கோபாலகிருஷ்ணன் (உப அதிபர்) அவர்களையும் சங்க உறுப்பினர்களையும் பெரிதும் பாராட்டினார்.

இச்சாதனைகளால் பெருமிதமடையாது நம் பணியைத் தொடர சகலரதும் ஒத்துழைப்பையும் வேண்டுவதாகவும் குறிப்பிட்டார். தான் யாழ் செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தின் தலைவராகவும், செயலாற்ற வேண்டியிருப்பதலால் இந்த வருடத்துடன் இவ்வமைப்பின் தலைமைப் பதவியைப் பிறிதோர் உறுப்பினரைப் பொறுப்பேற்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

சங்கப் போஷகர் திரு. க. கோபாலகிருஷ்ணன் தான் இந்தச் சங்கத்தில் இருபதாண்டு காலமம் இதன் போஷகராகவும் ஆலோசகராகவும் இருந்து பணியாற்றக் கிடைத்தகில் பெருமகிழ்ச்சியடைவதாகவும் இன்னும் பல ஆண்டுகள் சேவையாற்றுவதற்கு இறைவன் வேண்டிய பலத்தையும் ஆசீர்வாதத்தையும் அளிப்பாரென்ற நம்பிக்கை தனக்குண்டெனவும் சங்கத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு தன்னாலான சகலவற்றையும் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் வாக்குறுதியளித்தார். சங்க உறுப்பினர்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் யாழ் செவிப்புலனற்றோர் நட்புறவு நிலையத்தின் பணிகள் பற்றியுமெடுத்துரைத்தார்.

கூட்ட முடிவில் அடுத்த ஆண்டிற்கான தேர்தல் நடைபெற்றது.

புதிய தலைவராக திரு. அ. பாலநாயகம் தெரிவு செய்யப்பட்டார். புதிய தலைவர் தனது உரையில் முன்னைநாள் தலைவர் திரு. சண்முகநாதனின் பணிகளை பாராட்டித் தானும் தனது காலத்தில் சங்கத்தின் வளர்ச்சிக்குத் தன்னாலான சகலவற்றையும் செய்வதாக வாக்களித்தார். சகல உறுப்பினரும் ஒற்றுமையாக இருந்து வேண்டிய இடத்து தமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். செயலாளரின் நன்றியுடன் கூட்டம் முடிவுற்றது.

க. கோபலகிருஷ்ணன்,
போஷகர்.

# அன்பான வேண்டுகோள்

**நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலை**
**பழைய மாணவர் சங்கம் – ஸ்தாபனம் 1967**

பெற்றோருக்கு,

அன்புடையீர்,

உங்கள் பிள்ளைகளை நவீல்ட் பாடசாலையில் கல்வி பயில்வுதற்காக அனுப்பி படிப்பு முடிந்ததும் வீட்டில் ஒரேயடியாக வைத்திருப்பது முறையல்ல. அது அவர்களுக்கு ஒரு வெறுப்பையும் மற்றவர்களுடன் சரளமாகப் பழகும் தன்மையற்ற ஒரு தனிப்பட்ட வாழ்க்கையை உருவாக்கும்.

நீங்கள் அவர்களை எங்கள் பழைய மாணவர் சங்க ஆண்டு விழா, நட்புறவு நிலைய ஆண்டு விழா போன்ற பல விழாக்களில் பங்கு கொண்டு தமது நண்பர்களுடன் பழகுவதை தடை செய்யக் கூடாது. எவ்வளவிற்கு நண்பர்களுடன் பழகி பல விஷயங்களை அறிகிறார்களோ அவ்வளவிற்கு அவர்களுக்கு மனதில் சந்தோஷமும் ஆறுதலும் ஏற்பட்டு சகலருடனும் பழகும் தன்மையும் தாம் வலது குறைந்தோர் என்ற ஒரு தாழ்வு மனப்பான்மையும் உருவாகாது.

எங்களில் பல அங்கத்தவர்கள் சேர்ந்து எமக்கென ஒரு நட்புறவு நிலையம் அமைத்து அதில் எமது அங்கத்தவர்கள் தமது பல குறைகளை நிவிர்த்தி செய்கிறார்கள்.

குறிப்பாக வேலையின்மை, சம்பளக்குறைவு என்பவற்றை அதிகமாக நிவிர்த்தி செய்துள்ளனர்.

அத்துடன் செவிப்புலனற்றோர் பாதுகாப்பு நலன் கருதி அவர்களுக்கென தனியான அடையாள அட்டை கூட வழங்கப்படுகிறது. நீங்கள் தான் அவர்களை இப்படியான நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ளுவதற்கு முன்னின்று அனுப்பவேண்டும். எத்தனையோ பெண்பிள்ளைகள்கூட சகோதரங்களுடனும் ஏன் பெற்றோரே கூட்டிக் கொண்டு வந்து சிறப்பிக்கின்றனர். இவற்றை நீங்கள் கட்டாயமாக அறிந்து அவர்களை அனுப்பி வைக்கவேண்டும்,

ஏன் சமுதாயத்தில் அவர்களை ஒதுக்கி வைத்து தாழ்வு மனப்பான்மையை உருவாக்க வேண்டும். உங்கள் ஏனைய பிள்ளைகளைப்போல இவர்களையும் நடத்துங்கள்

இதை நாம் மட்டும் சொல்லவில்லை. உப அதிபரும் போஷகருமான திரு: கோபாலகிருஷ்ணன் கூட மிக மனவேதனையுடன் கூறியிருக்கிறார்.

எமது ஏனைய நண்பர்கள் போல் உங்கள் பிள்ளைகளையும் அனுப்பி வையுங்கள் எமது பாடசாலையில் கல்வி பயிலாத செவிப்புலனற்ற நண்பர்கள் எமது சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள் என்றால் கல்வி பயின்ற உங்கள் பிள்ளையை ஏன் விடக்கூடாது.

ஆண்டு விழாவிற்குக் கிட்டத்தட்ட 150 அங்கத்தவர்கள் வருகிறார்கள். ஒரு சிலர் மட்டும் பெற்றோர் தடுப்பதால் கலந்து கொள்வதில்லை. 24 ஆவது ஆண்டுவிழாவுக்கு அனுப்பி வைப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

பொருளாளர் செயலாளர் தலைவர்

# விளையாட்டுக் கழகம்

செவிப்புலன் இழந்தோருக்கு கல்வி புகட்டும் நோக்கத்துடன் கைதடி நவீல்ட் பாடசாலை உருவாக்கப்பட்டது. இங்கு நாம் கல்வியை மட்டுமல்லாது நல்ல பழக்க வழக்கங்களையும் கற்கின்றோம்.

பாடசாலை ஆரம்பத்திலிருந்து 1977 ம் ஆண்டு வரை எமக்கு பொழுது போக்கு வசதிகள் ஏற்படுத்தித்தரவில்லை. எமக்கு விளையாட்டுமைதானமோ விளையாட்டு உபகரணங்களோ ஒன்றும் இல்லை.

1977 ம் ஆண்டுக்குப் பின்னரே இத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

கிரிக்கெட், காற்பந்து போன்ற விளையாட்டுகளை விரும்பி விளையாடுகிறோம்

எங்களுக்குள்ளேயே போட்டிகள் நடாத்தபட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன

வழக்கமாக போட்டிகள் நடாத்தப்படும் போது தொடக்கம் இடைநிறுத்தம் முடிவு என்பவற்றுக்கு ஊது ஒலி பாவிக்கப்படுகின்றது.

ஆனால் நாங்களோ கேட்கும் சக்தியை இழந்தவர்கள் எங்களுக்கு போட்டிகள் நடாத்தப்படும்போது கொடிமூலம்சைகை காட்டியே பயன்படுத்தப்படுகிறது.

இங்கு படித்து முடித்த மாணவர்கள் தத்தம் திறமைகளுக்கேற்ப ஒவ்வொரு தொழிலை செய்து வருகின்றார்கள்.

நாங்கள் எங்கள் நண்பர்களுடன் கூடிக் கதைப்பதற்கோ பொழுது போக்கு நேரங்களை கழிப்பதற்கோ எங்களுக்கென்று தனியான இடமில்லை. தெருக்களிலும் சந்திகளிலும் நின்று கதைப்பதைப் பார்த்து மற்றவர்கள் எள்ளிநகையாடுகின்றனர்.

1982 ம் ஆண்டு வரை இந்நிலை தொடர்ந்தது.

1982 ம் ஆண்டு எங்கள் நிலையைப்பார்த்து சிலர் உதவ முன்வந்தனர். எனவே யாழ்ப்பாணத்தில் 426 கே. கே. எஸ். வீதியிலுள்ள கின்னர் மண்டபம் கிடைத்தது இங்கு படித்து முடித்த மாணவர்கள் எல்லாம் ஒன்று கூடுகின்றோம்.

நாங்கள் பொழுதுபோக்கு நேரங்களில் கிரிக்கெட் கால்பந்து விளையாட்டுக் களை விரும்பி விளையாடுகின்றோம்.

விளையாட்டு உபகரணங்கள் எங்களிடம் அதிகமில்லை.

ஒவ்வொரு குழுவாக பணம் சேகரித்து உபகரணங்கள் வாங்கி வருகின்றோம்.

எங்களுக்குள்ளேயே போட்டிகள் நடத்தி வந்த நாங்கள் மற்றவர்களுடன் போட்டியிடவிரும்பி ஒவ்வொரு இடமாக சென்று எங்களையும் போட்டிகளில் சேர்க்கு மாறு கேட்டு போட்டிகளில் கலந்து மற்றவர்களுக்கு எங்கள் திறமையை வெளிக் காட்டுகின்றோம்.

இன்று மற்றவர்களுடன் போட்டியடுமளவிற்கு நாம் உயர்ந்துள்ளோம்.

நாங்கள் கேட்கும் சக்தியையும் வாய்பேசும் தன்மையையும் இழந்தவர்கள்தான். மற்றவர்களைப் போல் நாமும் பலவற்றை சாதிப்போம் என்று நம்பிக்கை எமக்குண்டு.

சே. செல்வகுமார்
செயலாளர்
விளையாட்டுக் கழகம்


ஆக
ஊடாக
இடம்
உடைய
எனது
ஞாயிறு
திங்கள்
செவ்வாய்
புதன்
வியாழன்
வெள்ளி
சனி
2.


இன்று
நாளை
நேற்று
ஒவ்வொருநாளும்
இந்தக்கிழமை
போனகிழமை
வாறகிழமை
ஒவ்வொருகிழமையும்
இந்தமாதம்
போனமாதம்
வாறமாதம்


பார்
அப்பா
அக்கா
அம்மா
அண்ணா
தம்பி
நல்லது
கூடாது
பெயர்
விலாசம்
வேலை
நண்பன்



யார்?
என்ன?
எங்கே?
எப்போ?
எப்படி?
Stage I
எதில் I
Stage II
எதில் II
எத்தனை?
எவ்வளவு
ஏன்?
சுகமா?
யா?
இப்போ
காலை
இரவு
மத்தியானம்
மாலை
நான்
வருடம்
இந்த வருடம்
திகதி

விருப்பம்



விருப்பமில்லை



உள்ளே





எப்போ?



ஏன்?



யார்?

எத்தனை?



எத்தனை வயது?



அதேமாதிரி





வெளியே



சுகமா?



உடன்







ஊர்



கடிதம்



புண்



கோபம்



காதல்



சண்டை



# நம்முடைய ஆசைகளைக் குறைத்துக்கொண்டு ஏழைகளுக்கு ஓரளவு மிஞ்சும்படி செய்வது நமது கடமை

—மகாத்மா காந்தி


வாழ்த்துகிறோம்

ஹரன்
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**கோவில்களுக்குத் தேவையான**

பூசைமணி, பெரியமணி, கிடாரம், திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, கும்பத்திற்குரிய செம்பு வகைகள், சருவம், குடம், தீபம். தூபம் எவர்சில்வர், பித்தளை, செம்பு, அலுமினியப் பொருட்கள் முதலியன எம்மிடம் மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**சாமி பல்பொருள் களஞ்சியம்**
எவர் சில்வர் அன் பென்ஸி குட்ஸ்
313, கே. கே. எஸ். றோட்.
யாழ்ப்பாணம்.

# நேற்று — இன்று — நாளை

1966-ல் ஆரம்பிக்கப்பட்ட எமது செவிப்புலனற்றோர் நட்புறவுக் கழகம் முதலில் மிகச் சொற்ப அங்கத்தினரையே கொண்டிருந்தது. இதற்கு என ஒரு நிலையம் அப்போது இருக்கவில்லை. யாழ். பஸ் நிலையம் முன்பாகவுள்ள ''சிற்றி பேக்கறி'' முன்பாக அப்போது எமது உறுப்பினர்கள் கூடுவது வழக்கம்.

அப்போது நமக்கு அந்நிறுவன் உரிமையாளர் மிகவும் உதவினார். மழை நாட்களில் உள்ளே இருக்க வசதி செய்து தருவார்.

பல சந்தர்ப்பங்களில் பொலிசார் எமது உறுப்பினர்களைத் தாக்கியுள்ளார்கள்.

நாம் அனாவசியமாகக் கூடி நிற்பதாக அவர்கள் கண்டிப்பதுண்டு.

எமது பாஷையை அவர்கள் புரிவது இல்லை.

அந்த நேரங்களில் எமக்கு மிக உதவியவர் அப்பகுதியிலுள்ள வியாபார நண்பர்கள். மேலும் எம்மில் சிலர் கைது செய்யப்பட்டு மறுநாள் விடுதலையானதுமுண்டு.

இவ்வாறு நாம் பல இன்னல்களுக்கு ஆளானோம். இதனால் எமது கழகம் ஓர் இடம் தேவை என உணர்ந்து பல சமூகசேவை ஸ்தாபனங்களை உதவி கோரி இருந்தோம்.

இதன் பயனாக 1981 இல் லயன்ஸ் கழகத்தினரின் வேண்டுகோளுக்கமைய 'உதவும் கரங்கள்' ஸ்தாபனத்தார் கே. கே. எஸ். வீதியிலுள்ள கில்னர் மண்டபத்தின் ஒரு பகுதியை எமது நிலையத்துக்குத் தந்துதவினர்.

இப்போது எமது நிலையம் இங்கு சிறப்பாக இயங்குகிறது. எனிறும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் எமக்குச் செய்து தரப்படவில்லை.

எமது முயற்சியால் ஓரளவு வசதிகள் செய்துள்ளோம். கைத்தொழில் வேலைகள் ஆரம்பிக்க எண்ணி உள்ளோம்.

அதற்கான பணவசதி இன்று முன்னணியிலுள்ள சில ஸ்தாபனங்களிடம் கோரி இருக்கிறோம்.

எமது உறுப்பினர்கள் பலர் வேலைவாய்ப்பு இன்றி உள்ளனர். இவர்கள் மிகந்திறமையான கைத்தொழில் தும்பு வேலை போன்றன செய்வார்கள். மேலும் எமது நிலையத்திற்கெனச் சில பொதுமக்கள் நிதி உதவி செய்தனர்.

அவற்றுக்கெல்லாம் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. சண்முகநாதன்,
தலைவர்.

# ஒலியில்லா அதிர்வுகள்

தாலாட்டுக் கேட்டறியோம்
தாய்த் தமிழும் கேட்டறியோம்
ஒலியில்லா அசைவுகளை உன்னிப்பாய்ப் பார்த்திங்கு
ஒளிவின்றிக் கூறுகின்றோம் ஒலியிழந்தோர் அதிர்வுகளை

என் தந்தை தன் பிள்ளை செவிடென்று தெரிந்தவுடன்
முன் சென்று தொடர்பு கொண்ட டாக்டர்தான் எத்தனையோ
என் அம்மா விழுந்தெழுந்த கோயில்தான் எத்தனையோ
அத்தனைக்கும் கண்டபலன் காசுப்பை காலியானதுவே

நம்பிக்கை யிழந்த நம் பெற்றோர்
நவீல்ட் பாடசாலையே தஞ்சமென வந்தெய்தியதால்
நூற்கல்வி, தொழிற்கல்வி ஓரளவு கற்றுய்தோம்
ஈற்றில் எமக்கொரு தொழிலொன்று தேடுகின்றோம்.

தொழிலதிபர் கைவிரிக்க தொழிலாளர் எட்டிநிற்க
தொடர்கிறது போராட்டம் பெருகிறது எம் கூட்டம்
வளருகின்றோம் வயதாலே, தேய்கின்றோம் உடலாலே
தெய்வம் வரும் துணைக்கென்று தெருவெல்லாம் சுற்றுகிறோம்.

வருகிறது சோதனைகள் போகிறது சொந்தங்கள்
பந்தங்கள் தேடியிங்கே வாரிசுகள் வளர்கிறது
சங்கமொன்று எம் பெயரில் கூடியிங்கே
சாற்றுகின்றோம் மக்களுக்கு சக்திமிக்க அதிர்வுகளை

கேட்டிடுவீர்! காத்திடுவீர்!
பாரெங்கும் கூலியெங்கள்
பரிதவிக்கும் கூட்டமதின்
பரிதாபம் போக்கிடுவீர்!

"துன்னையூர்ச் சிவா"

# இவர்களும் மனிதர்கள்தான்

இறைவன் எனும் சிற்பியவன் செதுக்கியிந்த உலகினுக்கு
உவந்தளித்த சிற்பங்கள் சிலவற்றில் ஊழியினது தாக்கத்தால்
அவைகளிலே ஏற்பட்ட ஊனந்தான் இவர்களை
ஐப்புலனில் வலுவிழுந்தோர் ஆக்கிடுதோ அவனியிலே 1

இம்மாந்தர் அவனிதனில் வலுவிழுந்து வீழ்ந்தாலும்
இவர்களும் மனிதர்கள் தான் மந்தையல்ல இப்பூமியில்
இவர்களுக்கு நுண்ணறிவு பலவுண்டு படிப்பதனால்
இவர்களும் மேதைகள் ஆகிடுவர். 2

ஐம்புலனில் ஈர்புலன்கள் போனாலும் மற்ற
முப்புலனும் நன்றாய் இவர்கட்கு உதவுவதால்
இப்புலன்கள் இல்லையெனினும் நாம் வாழ்வோம்
இப்புவியில் அச்சமில்லை எமக்கதனால் என்றிடுவர். 3

செவ்விதழ் வாய்தான் ஒலிக்க மறுத்தாலும் செவிகள் கேட்க மறுத்தாலும்
சைகைகள் மூலம் செவ்வனே நினைத்ததை இயம்பிடுவர்
வாய் அசைவினைக் கொண்டே வார்த்தைகள் யாதெனப் புரிந்திடுவர்
பொய்மையில்லை எம்மிடம் என்பதைச் செயலிலும் காட்டிடுவர் 4

எதையும் தாமாகவே உணர்ந்திடும் தன்மை இவர்களிடம்
நிறையவே இருந்தாலும் மேலும் உணர்த்திட உணர்த்திட
மேதைகள் போல் ஆற்றல் வெளியிட ஆக்கங்கள் பல
ஆக்கியே தம் திறமையைத் திறம்படக் காட்டிடுவர். 5

சைகைகள் இவர்களது பாஷையம்மா அதை தம் சகாக்களுடன்
கைகளால் செய்து காட்டிப் பேசியே மகிழ்வதைக் கண்டால் நம்
மனசையே அச் செயல் கொள்ளை கொள்ளுதம்மா
பச்சைக் குழந்தைகள் போல் அவர்கள் பரவசமடைவதைப் பார்ப்பீரோ 6

கூட்டம் கூட்டமாய் அவர்கள் கூடிக்கதைப்பதோ பேரழகு
கேட்டு முடியாமல் போனாலும் நம்மால் அதை புரிவதற்கில்லை
பார்க்க பார்க்க அவர்களுக்கென்றே அப்பாஷையை ஆக்கிய
அறிஞரை நாம் போற்றிடத் தோன்றும். 7

இருண்ட வாழ்க்கை வாழ்ந்து வந்த செவிடர் குருடர் போன்றோரே
மருண்டு ஒதுங்கி ஒழித்திருந்த மழலைப் பண்பை கொண்டோரை
அருளைக் கொடுத்து காக்க வந்த இறைவன் போன்று
அருளைக் கொடுத்து காக்க வந்ததாம் நவீல்ட் கல்லூரி 8

பாரம் இவர்கள் எமக்கென்று பெற்றோர் நினைத்துக் கலங்கி நிற்க
சோகம் ததும்பும் வாழ்க்கையினை வாழ்ந்து இவர்கள் நலிந்து நிற்க
காலம் வந்தது இவர்களுக்கு வாழ்வும் வந்தது இவர்களுக்கு
தேடி வந்த அறிஞர் பலர் சேர்த்துக் கொண்டார் தம்மிடமே 9

அறிஞர் பலராம் ஒரு குழுவாய் சேர்ந்தே இருந்து செயல் செய்து
உருளும் உள்ளங்கள் ஒருங்கே இருந்து கருணை பொலிய
அறிவும் நவீனமும் இரண்டறக் கலந்து அன்பாய் பண்பாய்
ஆக்கம் தந்திட இவர்களுக்கொரு துணையாம் நவீல்ட் 10

இவர்கள் பிறந்தமையால் கலங்கி நின்ற பெற்றோரும்
அவலம் பேசி அளந்து திரிந்த அயலோரும்
ஏளனமாய்க் கேலி செய்த இளையோரும்
ஆகா வென்ற வியக்கும் வண்ணம் உயர்த்திற்றம்மா நவீல்ட் 11

இன்று இவர்கள் பெருமையுடன் உவகை பொங்க வாழ்வதனை
நன்றி மறவாத் தன்மையுடன் தம்மை வளர்த்த தாபனத்தை
என்றும் நினைவில் வைத்திருந்து நலமான பல சேவைகளை செய்து கொண்டு
இன்றாம் திரிவதை நாம் காணின் எமக்கும் உவகை பொங்குதல்வோ. 12

செல்வி செ. திருச்செல்வி

# சைகை மொழி கற்றல்

## கவனிக்க வேண்டியவை சில

* சைகை மொழி என்பது செவிப்புலனற்றோர் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன் படுத்தப்படும் உடல் அசைவுகள் ஆகும். கூடுதலாகக் கை அசைவுகள்.

* சைகைமொழி பகுத்தறிவையும் பொருட்களின் அல்லது செயல்களின் இயல்பான அசைவுகளையும் அல்லது முதல் எழுத்துக்களையும் (ஆங்கில கைவிரல் முறை) அடிப்படையாகக் கொண்டது.

* சைகை மொழியைக் கற்கும்போது கூர்ந்த கவனிப்பு அவசியம். பக்க ஈரப்புகள் இருக்கும்போது சைகை மொழியைக் கற்பது கடினம்:

* சைகை மொழியைக் கற்பவருக்கும். கற்பிப்பவருக்கும் இடைத்தூரம் நான்கு அல்லது ஐந்து அடிகளுக்கு அதிகரிக்காமல் இருத்தல் விரும்பத்தக்கது.

* சைகை மொழியைக் கற்பிப்பவர் வேண்டிய இடத்து உரிய உதட்டு அசைவு களையும் முகபாவனைகளையும் செய்யத்தவறலாகாது.

* சைகை கற்பிக்கும் இடம் போதிய வெளிச்சம் உள்ளதாக இருத்தல் அவசியம்,

* சைகை மொழியைக் கற்பிப்பவர் மார்புக்கு முன்னால் ஒரு கையையோ அல்லது இரு கைகளையுமோ தெளிவாகவும் மெதுவாகவும் அசைத்துக்காட்ட வேண்டும்.

* சைகை மொழி மூலம் பெரிய மக்கள் கூட்டத்தில் உரைநிகழ்த்துதல் கடினம்.

* சைகை மொழிமூலம் பேசும்போது யாவரும் பேசுபவரைக் காணக்கூடியதாக அசைவுகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

* சைகை மொழியைக் கற்பிப்பவர் அனுபவம் மிக்கவராகவும், மொழியில் பாண்டித் தியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

* சைகை மொழியைக் கற்பிப்பவரோ. கற்பவரோ களைப்பான நேரத்தில் சைகை மொழிப் போதனையைத் தவிர்த்தல் நலம்.

* சைகை மொழிமுலம் உரை நிகழ்த்த வேண்டியேற்படுமிடத்து உரைநிகழ்த்தப் போகும் விடயம் பற்றி முதலில் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

* சைகை மொழிமூலம் பேசுவதாக இருப்பினும் பேசுபவரின் அடிப்படை மொழி யையும் கேட்போர் அறிந்திருத்தல் அவசியம். உதட்டு வாசிப்பு முறை. கவனிக் கப்படும் போது இன்னுமோர் மொழியாயின் மயக்கத்தையேற்படுத்தும். விரல் மொழி வளர வேண்டிய மொழியாகும்.

தொகுப்பு

**க. கோபாலகிருஷ்ணன்**

# வாய்பேச முடியாத ஒரு குடும்பத்தினரின் வேண்டுகோள்

அப்பா, அம்மா அவர்களுக்கு முக்கிய வேண்டுகோள். வாய் பேசமுடியாத நிலையில் உள்ள உங்களது பிள்ளைகளைக் கைதடி நவீல்ட் பாடசாலையில் சேருங்கள்.

அங்கே எல்லா வசதியும் கிடைக்கும்.

பிள்ளைகள் வாய்பேசாதிருந்தால் வீட்டில் வைத்திருக்காதீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் வீண். உங்கள் சுகத்தைப் பார்க்காதீர்கள்.

பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கொஞ்சமாவது சிந்தியுங்கள்.

பெரியோர்களே நீங்கள் அறிந்த வாய்பேச முடியாத பிள்ளைகளை அல்லது உங்கள் உறவினர்களின் பிள்ளைகள் அல்லது தெருவில் போகும்போது எதிர்பாராத நோக்கில் கண்டவர்களை வாய்பேச முடியாமல் யாராவது இருந்தாலும் கைதடி நவீல்ட் பாடசாலையில் சேர்த்தால் பிள்ளைகளின் எதிர்காலம் சந்தோஷமாக இருக்கும்.

பாடசாலைக்குப் போய் இடையில் நின்றவர்கள் திரும்பப் போகமுடியாத நிலை என்றால் யாழ்/செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம், 426, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம் என்ற இடத்தில் ஒப்படைக்கவும்.

உங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு சேர்க்க வேண்டும் என்றால் யாழ்/செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம், 426, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம் அங்கே சென்று சந்தித்து இரண்டு கிழமைகளுக்கு முன்பு உங்கள் பிள்ளைகளைச் சேர்க்கலாம்.

வாய்பேச முடியாத பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்க வேண்டாம்.

கதைக்க முடியாத பிள்ளைகளைக் கவனிக்க வேண்டும்.

பெரியவர்களே உங்கள் பிள்ளையின் நன்மை தீமை எவையாயினும் கதைக்க வேண்டும் என்றால் யாழ்/செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம், 426, கே. கே எஸ். றோட், யாழ்ப்பாணம் என்ற இடத்தில் நம்மைச் சந்திக்கவும், உங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் பூர்த்தியடைய வேண்டும் என்பதற்காக உங்களுக்குக் கஷ்டம் எதுவும் இல்லை. ஆகக் குறைந்தது ஒரு வருடத்தில் 25 ரூபா செலவிட்டால் போதும். வேலையோ/நன்மை தீமையோ நாங்களே ஒன்று சேர்ந்து ஆலோசிப்போம். இங்கேயும் நடக்கிறது.

வாய்பேச முடியாத பிள்ளைகளும் திருமணமாக வேண்டும். சந்தோஷமாக வாழ வேண்டும். உங்கள் பிள்ளைகளின் மனதை சந்தோஷப்படுத்துங்கள். நாங்கள் இருவரும் வாய்பேச மாட்டாதவர்கள். நாங்கள் இரு மதத்தவர்கள். நான் இந்து, மனைவி இஸ்லாமியர். நாங்கள் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்தோம். எமக்கு மகன் உண்டு. அவர் கதைப்பார். நாங்கள் சந்தோஷமாக இருக்கிறோம்.

எம்மைப்போல ஏனையோர் வாழ்க்கையும் செழிக்க இறைவனை வேண்டுகிறேன்.

T. K. ரஞ்சன்.

# செவிப்புலனிழந்தோர் படும் இன்னல்கள்

01. தாயாரின் இனிய குரலறியாதது செவிப்புலனிழந்த குழந்தை.

02. தந்தையின் மிரட்டல் குரலாலும் பயனேதுமில்லை.

03. மணி அசைகின்றது. காகத்தின் அலகுகள் அசைகின்றன. பேரூர்தி பெரிய இரைச்சலுடன் விரைகிறது. வெறும் அசைவையே இவர்கள் காண்கின்றனர். ஒலி அறியார்.

04. பின்னால் வரும் வாகனத்தின் ஒலி அறியார். சாரதிக்கோ நிலமை புரியாது கோபிக்கின்றான். ஈற்றில் வாகனம் உடலில் உராயும்வரை உணரமுடியாத அவலநிலை. இவ்வாறு காயப்பட்டோர் உயிரிழந்தோர் பலர்.

05. பாதுகாப்புப் படையினர் பீரங்கி வேட்டுகளைத் தீர்த்துக்கொண்டிருப்பர். காரண மறியாதோராய்ப் பிறரோடுவதைப் பார்த்தோட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை.

06. காவற்படையினரின் கையில் அகப்பட்டால் தங்கள் நியாயத்தினைக் கூறுவதற்கிடையே மொழி தெரியாது தாக்கப்படும் அவலநிலை.

07. இனிய சங்கீதக் கச்சேரியோ, அடுக்குமொழி நிறைந்த மேடைப் பேச்சோ, துன்பத்தை வெளிப்படுத்தும் அழுகுரலோ எல்லாமே இவர்களுக்கொன்றுதான்.

08. திருடர்கள் வீட்டில் நுழைந்து உடைமைகளைத் திருடும்பொழுது இவர்களால் உணர்ந்துகொள்ள முடியாத நிலை.

09. தமது சொந்தக் குழந்தையின் மழலையைக் கூடக் கேட்கமுடியாத துர்ப்பாக்கியசாலிகள்.

10. இரவு வேளைகளில் தமது குழந்தை நோயினாலோ, பசியினாலோ அழுவதைக் கூட உணர முடியாத நிலை.

11. தம்மைப் பற்றிப் பிறர் பேசுவதையே உணரமுடியாதோர், செவிப்புலனிழந்தோர்.

12. தமது உணர்வுகளைத் தமது சகாக்களுடன் பகிர்ந்து கொள்வதைக் கண்டு நகையாடும் சமுதாயம் அவர்களைச் சூழ உள்ளது.

13. எவ்வளவோ திறன்கள் இருந்தும் சமுதாயம் கணிக்கின்றதிலையே என்று அல்லும் பகலும் பெருமூச்சு விடும் - செவிப்புலனிழந்தோர் சமுதாயம்.

14. எதற்கும் விழிப்புலனையே நம்பி வாழ்பவர் செவிப்புலனிழந்தோர்.

15. செவிப்புலனிழப்பு ஒருவரின் உள வளர்ச்சியையும் பாதிப்பதாக ஆராய்வாளர் உணர்த்தியுள்ளனர்.

க. கோபாலகிருஷ்ணன்,
துணை அதிபர்.

# கிறீஸ்தவக் கழகம்

யாழ் செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் சகல மத உறுப்பினர்களையும் உள்ளடக்கியது. இந்து, கத்தோலிக்க, கிறீஸ்தவ உறுப்பினர்களிடையே சகோதரத்துவ உணர்வு மிளிர்கிறது. மத விழாக் கள் நிலையத்தால் சிறப்புறக் கொண்டாடப்படுகின்றன. இந்து மத விழாக்களான உழவர் திருநாள், புத்தாண்டு, கலைமகள் விழா, தீபா வளி, கார்த்திகைத் தீபம் என்பன தவறாது கொண்டாடப்பட்டு வரும் பெருநாட்களாகும்.

இதேபோன்று கிறீஸ்தவ உறுப்பினர்களால் வருடாந்தக் கிறிஸ் மஸ் கொண்டாட்டத்தில் சகல நிலைய ஊழியர்களுக்கும், உறுப்பினர் களின் பிள்ளைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படுவது விழாவின் ஓர் சிறப்பம்சமாகும்.

கிறீஸ்தவ மதத்தைப் பேணும் நோக்குடனும், வருடாந்த நத் தார் தினத்தைச் சிறப்புறக் கொண்டாடும் நோக்குடனும் 1986-ம் ஆண்டு ஒரு கிறீஸ்தவக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகம் கடந்த ஐந்து ஆண்டுகளாக தன்னாலான சிறந்த பணியை உறுப்பினர்களுக்கு ஆற்றி வருகின்றது.

ஐந்து ஆண்டுகளிலும் நத்தார் தினம் மிகச்சிறப்பாகக் கொண் டாடப்பட்டு வந்துள்ளது. இக்கழகம் எதிர்காலத்திலும் தனது பணி யைச் செவ்வனே செய்யுமென்பது எமது நம்பிக்கை. இக்கழக வளர்ச் சிக்கு இறைவனை வேண்டுகிறோம்.

ஜோ. பாலநாயகம்
தலைவர்

# கைத்தொழிற் பேட்டை

ஈழம் வாழ் தமிழ்பேசும் செவிப்புலனற்றோர்களின் முக்கிய பிரச்சனைகளில் ஒன்று வேலைவாய்ப்பின்மை. இவர்களுக்காக இயங்கும் விசேட பாடசாலையான கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலனிழக்தோர் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறியோருக்கும் சரி, கல்விகற்காதோருக்கும் சரி வேலை தேடுவதென்பது பெரும் பிரச்சனையாகவே இருக்கின்றது.

வெளிநாடுகளில் வேலைவழங்குவதில் இவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப் பட்டிருந்தாலும் நமது நாட்டில் இவர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

இந்நிலை வேதனைக்குரியதாகும்.

ஒரு சிலர் மட்டும் அரசாங்க அலுவலகங்களில் சிற்றூழியர்களாகக் கடமை யாற்றுகின்றனர். ஏனையோர் சிறு சிறு சுயதொழில்களை மேற்கொள்பவர்களாகவும் வேலையற்றவர்களாகவுமே இருந்து வருகின்றனர். இப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் வழிகளிலொன்றாக 1987ம் ஆண்டு யாழ் செவிப்புலனற்றோர் தலைமையகமமைந் திருக்கும் கில்னர் மண்டபம், 426 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் ஓர் கைத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

கில்னர் மண்டபத்தில் அமைக்கப்பட்ட கைத்தொழிற்சாலை சரித்திர முக்கியத் துவம் வாய்ந்தது. செவிப்புலனிழந்தவர்களுக்காக செவிப்புலனிழந்தவர்களால் முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழிற்சாலை இதுவாகும். இதற்கு வேண்டிய ஆரம்ப நிதியை பொதுமக்களிடமிருந்தே திரட்டக் கூடியதாக இருந்தது.

இங்கு ரொபி உற்பத்தி, மெழுகுதிரி உற்பத்தி, தும்புத்தொழில் என்பன மேற் கொள்ளப்பட்டன. இருபது பேர்வரையில் இங்கு வேலைவாய்ப்பும் பெற்றனர். பொது மக்களிடமிருந்து இங்கு உற்பத்தியாகும் பொருட்களுக்கு பெரும் வரவேற்பும் கிடைத்தது. ஒரு பொருட்காட்சியும் ஒழுங்கு செய்யப்பட்டு இப்பொருட்காட்சி மூலம் பெருந் தொகையான பணமும் சேகரிக்கக் கூடியதாக இருந்தது.

பொதுமக்களிடையே செவிப்புலனிழந்தோர் திறன் பற்றி ஓர் விழிப்புணர்வு ஏற்படுவதற்கும் இப்பொருட்காட்சி ஓர் தூண்டுதல் சக்தியாக அமைந்தது.

இந்திய அமைதிகாக்கும் படை தமது இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்ட பொழுது ஏதிர்பாராத வகையில் இத்தொழிற்சாலையும் பாதிக்கப்பட்டது இயந்திர உபகரணங்கள், மூலப்பொருட்கள், தளபாடங்கள் யாவும் சூறையாப்

பட்டன. இங்கு வேலை செய்த அத்தனைபேரும் நிர்க்கதிக்குள்ளானார்கள். ஆனால் உறுப்பினர்கள் சோர்வடையவில்லை. அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடம் (T. R. R. O) இவர்களின் அவலநிலை எடுத்துக் கூறப்பட்டது.

இவர்களின் நிலை கண்டு இரங்கிய புனர்வாழ்வுக் கழகத்தினர் இத்தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்கவென ஒரு இலட்சத்திற்கு மேலான பணத்தைத் தந்துதவினர்.

இவ்வுதவியைப் பெறுவதில் பெரும் முயற்சியெடுத்த நிலையத்தின் போஷகர் திரு. க. கோபாலகிருஷ்ணன் அவர்களதும், தலைவர் ஜோ. பாலநாயகத்தினதும் பங்கு அளப்பிடற்கரியது. இவ்வுதவியைக் கொண்டு 1989-ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 4-ம் நாள் கைதடியில் ஓர் தனியார் கட்டடத்தில் இத்தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப விழாவில் அகதிகள் புனர்வாழ்வுக் கழக உதவித் தலைவர் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இத்தொழிற்சாயில் ரொபி, இனிப்பு வகைகள் மெழுகுதிரி, சந்தனக்குச்சி, தும்புப் பொருட்கள் பழரசம், ஜாம் என்பன உற்பத்தி செய்யப்பட்டன. இருபதுக்கு மேலான ஊழியர்கள் கடமையாற்றினர். இரண்டு ஆண்டுகள் இதே இடத்தில் இத்தொழிற்சாலை போஷகர் திரு க. கோபாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் மிகத் திறமையாகச் செயற்பட்டது. 1991-ம் ஆண்டு இத்தொழிற்சாலை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 53-ம் இலக்கக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

புதிய கட்டடத்தில் தொழிற்சாலை மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. தற்பொழுது இதன் பிரதான மேற்பார்வையாளராகத் தலைவர் திரு. ஜோ. பாலநாயகம் கடமையாற்றுகிறார். முப்பதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். பலரினதும் 'ஆசீர்வாதமும் ஒத்துழைப்பும் கிடைக்கின்றது. மூலப்பொருட்கள் சில பெறமுடியாமையினால் மெழுகுதிரி போன்ற சில உற்பத்திகளை நிறுத்தி பற்பொடி போன்ற உள்ளூர் மூலப்பொருட்களோடு உற்பத்தி செய்யக்கூடிய புதிய உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைத்தொழில் பேட்டை என்ற பெயரில் தற்பொழுது இந்நிலையம் இயங்குகின்றது- இந்நிலையம் பெரும் வெற்றியை அளிக்குமென்பது எமது நம்பிக்கை. இந்நிலையம் மேன்மேலும் வளர சகலரது ஆசியையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறோம். நன்றி.

வாழ்க தொழிலகம் ! மிளிர்க செவிப்புலனற்றோர் வாழ்வு !

நிர்வாகக் குழு,
யாழ்/செவிப்புலனற்றோர் கைத்தொழில் பேட்டை

53, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

யாழ். செவிப்புலனற்றோர்

# கைத்தொழிற் பேட்டை

153, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| மில்க் ரொபி | 1 பக்கற் | 150 துண்டு |
| மின்ற் ரொபி | 1 பக்கற் | 150 துண்டு |
| பார்லி சுகர் | 1 பக்கற் | 150 துண்டு |
| கொக்கோ | 1 பக்கற் | 150 துண்டு |
| லொலிபப்ஸ் | 1 பக்கற் | 100 துண்டு |
| வரி புல்டோ | 1 பக்கற் | 100 துண்டு |
| புல்டோ | 1 பக்கற் | 100 துண்டு |
| கடாபி | 1 பக்கற் | 100 துண்டு |
| நதியா | 1 பக்கற் | 100 துண்டு |
| சுவிங்கம் | 1 பக்கற் | 50 துண்டு |
| ஊதுபத்தி | 1 பக்கற் | 12 பெட்டி |
| பற்பொடி | | |
| தும்புத்தடி | | |

மேலேயுள்ள அனைத்து பொருட்களும் வாய் பேசமுடியாத எம்மால் தயாரிக்கப்படுகின்றன. ஆகவே எமது இந்த உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து மேலும் மேலும் வளர்ச்சியடைய உறுப்பினர்கள், வர்த்தகர்கள், தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

நன்றி.